ஆசிரியருக்கான

# மூலவளப் புத்தகம்

உள-சமூக தலையீட்டு ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம்



கல்வி அமைச்சு
இசுருபாய, பத்தரமுல்லை,

unicef

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் உளசமூக சேமநலனை மேம்படுத்துவதற்கான இவ் இடைத்தாக்க சாதனங்கள் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் இலங்கை யுனிசெப் ஆகியன பயனுறுதிமிக்க முறையில் இணைந்து பணியாற்றியமையின் பெறுபேறாகப் பெறப்பட்டவையாகும். உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல், வாழ்க்கைத் திறன்கள் விளையாட்டு, மற்றும் சகபாடிகளுடனான உடன்பாடான உறவுகள் என்பவற்றை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் மூலம் உள்ளார்ந்த சக்தியை விருத்தி செய்து, அதனைக் கட்டியெழுப்புவதற்கு பிள்ளைகளுக்கு உதவுவதற்கான ஒரு ஒப்பற்ற நிலையிலிருக்கும் இலங்கையிலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்குமாக இச் சாதனங்கள் வடிவமைக்கப்பட்டன.

உள-சமூக தலையீட்டு ஆலோசனை நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர் என்ற வகையில் இச் சாதனங்களை உருவாக்குவதில் தங்கள் பங்களிப்பை நல்கி தங்கள் நேரத்தையும் கடும் உழைப்பையும் வழங்கிய அனைவருக்கும் பிரத்தியேகமாக எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி அமைச்சின் செயலாளரான திரு. ஆரியரத்ன ஹேவகே, கல்வி தர அபிவிருத்தி மேலதிக செயலாளர் திரு. எம். ஜீ. டி. நவரத்ன முன்னால் கல்வி அமைச்சின் செயலாளரான டாக்டர் தாரா டி மெல் ஆகியோரால் வழங்கப்பட்ட பெரிதும் பாராட்டுக்குரியதும் பெறுமதிமிக்கதுமான ஆதரவு பற்றி விசேடமாக குறிப்பிடப்படல் வேண்டும்.

இலங்கைச் சூழமைவுக்கு பொருந்தக் கூடியவாறு சாதனங்களை அமைத்துக் கொண்டும், புத்தாக்கக் கருத்துக்களையும் செயற்பாடுகளையும் சேர்த்துக் கொண்டும் ஆசிரியர்களுக்கான மூலவளப் புத்தகம், பிள்ளைகளுக்கான செயற்பாட்டுப் புத்தகம் மற்றும் பயிற்சிக் கையேடு என்பவற்றை தயாரித்த ருஷிகா அமரசேகரா அவர்களுக்கு விசேட நன்றி உரித்தாகுக. இச்சாதனங்கள், உகண்டா தேசிய உளசமூக மத்திய அணியினால் உகண்டா கல்வி அமைச்சு மற்றும் உகண்டா யுனிசெப் ஆகியவற்றுடன் கூட்டாக இணைந்து விருத்தி செய்யப்பட்ட மாதிரியை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

வியத்தகு தெளிவாக்கங்களுக்காகவும் தேர்வு அட்டைகளின் வடிவமைப்பு மற்றும் தயாரித்தலில் கூட்டாக இணைந்து பணியாற்றியமைக்காகவும் அமரா அமரசிங்க அவர்களுக்கும் விசேட நன்றிகள் உரித்தாகட்டும். விளையாட்டு, நாடகம் மற்றும் கதாபாத்திரங்களை நடித்துக் காட்டுதல் என்பவற்றுக்கு பங்களிப்பு நல்கிய திரு. ஜேம்ஸ் தோம்சன் (மான்செஸ்டர் பல்கலைக்கழகம்) என்பவருக்கும் நன்றி உரித்தாகட்டும். இச்சாதனங்களின் ஆக்கத்தின் போது ஆதரவையும் உற்சாகத்தையும்

இம் முன்னெடுப்பிற்கான புத்தாக்க யோசனைகளை வழங்கியமைக்காக உள-சமூக தலையீட்டு நிகழ்ச்சித் திட்ட யுனிசெப் ஆலோசகரான திருமதி. சாரா கிரகாம் அவர்களுக்கும் விசேட நன்றிகள்.

இச் சாதனங்களை உருவாக்குவதில் தமது ஒத்துழைப்பையும் உற்சாகத்தையும் வழங்கியமைக்காக இலங்கை யுனிசெப் விசேட நன்றியறிதலுக்கு உரித்துடையதாகிறது. இச்சாதனங்களை மீளாய்வு செய்து அவற்றுக்கான வழிகாட்டலை வழங்கிய அநேக ஆசிரியர்கள் மற்றும் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், ஏனைய தொழில்சார் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் பிரத்தியேகமான நன்றி உரித்தாகட்டும்.

திரு. கே.பீ.என். பிரேமசிரி
பணிப்பாளர்
உள-சமூக தலையீட்டு ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம்
கல்வி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவ கல்வி அமைச்சர் அவர்களின் செய்தி

இன்றைய பல்சமூக கட்டமைப்பின் கீழ் பாடசாலைக் கல்வியூட்டல் செயல்முறை என்பது பெரும் சவாலான ஒன்றாக அமைந்துள்ளது.

நாட்டின் எதிர்கால மனிதவள அபிவிருத்தியைப் பொறுத்தமட்டில் பெரும் சவாலாக அமைவது தற்போது கல்வி வளர்ச்சிக்கென எடுக்கப்படும் நடவடிக்கைகளாகும். தற்போது கல்வி வளர்ச்சிக்கென எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஒழுங்குற மேற்கொள்வதன் மூலம் எதிர்கால சமூகத்திற்குப் பொருத்தமான சமபல சக்திவாய்ந்ததொரு பரம்பரையை நாட்டில் உருவாக்க முடியும்.

இது சம்பந்தமாக கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் பாடசாலைகளுக்கான உள சமூக வளர்ச்சி நடவடிக்கைகளுக்கென வடிவமைக்கப்பட்டிருக்கும் இப்புத்தக வரிசை பெரும் உதவியானதாக அமையும் என்பது எனது நம்பிக்கை

பாடசாலை மாணவர்களை இலக்காகக்கொண்டு அவர்களுக்கு உதவும் வகையில் ஆசிரியர்களுக்கு பக்கபலமாகவும் பிள்ளைகளுக்கென வடிவமைக்கப்பட்டுள்ள இலகுவான வகையில் உளவியல் அறிவை ஊட்டக்கூடியதான முன்னெடுப்பு இப்புத்தகங்களின் அறிமுகத்தின் மூலம் சாத்தியமாகிறது.

இவ்விதமாக மாணவர்களின் உள சமூக வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் முயற்சிகள் பலனளிப்பதற்கு ஆசிரியர்களாகிய உங்களின் பங்களிப்பை நான் பெரிதாக மதிக்கிறேன்.

சுசில் பிரேமஜயந்த

மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியமைச்சு செயலாளர் அவர்களின் செய்தி

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படும் கல்வி சம்பந்தமான நடவடிக்கைகள் யாவும் நாட்டின் கல்வி அபிவிருத்திக்கு வழிகோலுவதாக அமைந்துள்ளன.

இதன்படி தற்போது பாடசாலைகள் மாணவர்களுக்கு வழங்கும் அறிவு மற்றும் சாமர்த்தியம் மூலமாக அவர்கள் பெறக்கூடிய அனுகூலங்கள் ஏராளமாகும்.

இவ்வகையில் யூனிசெப் உதவியுடன் வடிவமைக்கப்பட்டிருக்கும் இப்புத்தக வரிசை விசேடமாக மாணவர்களின் உள சமூக அபிவிருத்தியை இலகுவான செயற்பாட்டுக்கு உரியதான வகையில் தெளிவாக விளக்குகின்றது.

இதன் மூலமாக இலங்கையின் ஆசிரிய தலைமுறைக்கு வழங்கப்படும் பெரும் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக மிகவும் இலகுவான முறையில் வடிவமைத்து வழங்கப்படுகிறது இப்புத்தக வரிசை.

ஆரியரத்ன ஹேவகே
செயலாளர் கல்வி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர்களுக்கான மூலவளப் புத்தகம் | 01 |
| அடிப்படைத் தேவைகளும் சாதாரண விருத்தி வெளிப்பாடுகளும் | 02 |
| பிள்ளைகளுக்கு ஆதரவு வழங்குவதில் ஆசிரியரின் பங்கு | 04 |
| மாணவர்களை ஊக்குவித்தல் | 05 |
| ஆக்கச் செயற்பாடுகள் | 08 |
| எனது மாணவர்களின் பிரச்சினைகள் பற்றி அவர்களுடன் நான் எவ்வாறு உரையாடலாம்? | 13 |
| வகுப்பறை முகாமைத்துவத் திறன்கள் | 15 |
| குடும்பம் மற்றும் சமூகம் என்பவற்றுடனான இடைத்தாக்கங்கள் | 16 |
| பிற உதவுனர்களிடம் வழிநடத்தல் | 18 |
| ஆசிரியர்களுக்கு ஆதரவளித்தல் | 19 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களுக்கான மூலவளப் புத்தகம்

ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு கல்வியைப் புகட்டுவதுடன்,இக்கட்டான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கும் மாணவர்களுக்கு ஆதரவை வழங்குவதற்கு வேண்டிய அதிகப்படியான துணிச்சலையும் சக்தியையும் கொண்டிருக்க வேண்டியவர்களாயுள்ளனர். ஆசிரியர்கள் தங்களுடைய பணியை பயனுறுதிமிக்கதாக ஆற்றுவதற்கு வேண்டிய,தொடர்ச்சியான வல்லமையைக் கொண்டிருப்பதற்கு உதவும் வகையில் இப்புத்தகம் வடிவமைக்கப்பட்டது. இத்துடன் மாணவர்களுடன் பயன்படுத்துவதற்காக தொடர்பு சாதனங்களின் பொதியொன்றும் இணைக்கப்பட் டுள்ளது.

### பிள்ளையின் உரிமைகள்:

"பிள்ளைகளின் உயிர்களைப் பாதுகாப்பதற்கும், துன்பங்களை பெருமளவில் குறைப்பதற்கும், அவர்களின் மனித ஆற்றல்கள் பூரணமாக விருத்தியடைவதை மேம்படுத்துவதற்கும், அவர்களது தேவைகள், உரிமைகள் மற்றும் வாய்ப்புகள் என்பவற்றுக்கு அவர்களை விழிப்படையச் செய்வதற்கும் கூட்டாக எமது நாடுகள் வழிமுறைகளையும் அறிவையும் கொண்டுள்ளன"[1]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பிள்ளைகளின் உய்வு, பாதுகாப்பு மற்றும் விருத்தி பற்றிய ஐக்கிய நாடுகள் பிரகடனமும் ஐ.நாவின் செயல்திட்டமும

## அடிப்படைத் தேவைகளும் சாதாரண விருத்தி வெளிப்பாடுகளும்



பிள்ளைகளும் கட்டிளமைப் பருவத்தினரும் உடல்ரீதியான பாதுகாப்புக்கான அடிப்படைத் தேவையை, உண்மையில் உரிமையைக் கொண்டுள்ளனர். இது உணவு, சுத்தமான நீர், வாழிடம், முறையான சுகாதார வசதிகள் மற்றும் சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் என்பவற்றை உள்ளடக்கும். அதேவேளை, மக்களுடனான இடைத்தாக்கத்துக்குரிய அடிப்படைத் தேவையொன்றும் உண்டு. உண்மையில் நன்கு விருத்தியடைவதற்கு பிள்ளைகளுக்கும் வளரிளம் பருவத்தினருக்கும் உணர்வு ரீதியான பிணைப்புகளும் சமூக ஸ்திரநிலையும், உடல்ரீதியான பாதுகாப்புடன் மேலதிகமாகத் தேவைப்படுகின்றன.

### உணர்வு ரீதியான பிணைப்பு

ஒரு பிள்ளை அல்லது கட்டிளமைப் பருவத்தினர் ஒருவர் பரிச்சயமான மற்றும் தகுதிவாய்ந்த பராமரிப்பு வழங்குபவர் ஒருவரால் பராமரிக்கப்படும் போது, அவர் அப்பிள்ளை அல்லது கட்டிளமைப்படுவத்தினருடன் பேசும் போதும் செவிமடுக்கும் போதும் உணர்வு ரீதியான பிணைப்பு ஆரம்பிக்கும். இந்த உறவானது, பிள்ளை அல்லது கட்டிளமைப்பருவத்தினர், தம் எதிர்காலத்திற்கு திட்டமிடலுக்கும் தம் குறிக்கோள்களை அடைவதற்கும் தேவையான மன அமைதி, சுய நம்பிக்கை என்பவற்றுக்கு அத்தியாவசியமாகும். அவர் அன்பை சுயாதீனமாகப் பரிமாறிக் கொள்வதற்கும் அதிகளவு இயலுமையைக் கொண்டவராக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமூக உறுதி நிலை

பிறருடனான நேரான இருவழித்தொடர்பாட லானது சமூகம், தொடர்ச்சி, நிறுவனம், நிரந்தரம், உரித்துடைமை மற்றும் உறுதிநிலை என்னும் அத்தியாவசிய உணர்வுகள் விருத்தியடைவதற்கு வழிவகுக்கின்றது. இவை பிள்ளையானது, இந்த உலகில் தனக்கு முக்கிய இடமொன்றுண்டு என்பதைப் புரிந்துகொள்ள உதவுவதுடன் சிரமங்களை சமாளிப்பதற்கு அதற்கு ஆற்றல் உண்டு என்பதையும் காட்டுகின்றன.

ஆசிரியர் என்ற முறையில், எனது மாணவர்களுள் ஒருவர் திருப்தியாக வளர்ச்சியடைகின்றாரா என்பதை எவ்வாறு நான் கூறமுடியும்?

### திருப்தியாக வளர்ச்சியடையும் பிள்ளைகள் அல்லது கட்டிளமைப் பருவத்தினர்:

- பிறருடன் சிறந்த முறையில் தொடர்பு கொள்ளவும், பரஸ்பர மதிப்பு மற்றும் மரியாதை என்பவற்றைப் பேணவும் முடியும்.
- சரியானவற்றை, பிழையானவற்றிலிருந்து வேறுபடுத்திப் புரிந்து கொள்ள முடியும்.
- பிறருடன் அன்பாகப் பழகமுடியும்.
- நியாயம் காண ஆக்க, கற்பனை செய்ய, திட்டமிட பரிசோதிக்க முடியும். சம்பவங்கள் மற்றும் செயற்பாடுகளை சரியான முறையில் தொடர்புபடுத்த முடியும்.
- அவர்களின் குடும்பத்தினால் மதிக்கப்படுவதை உணரமுடியும்.
- மற்றையவர்களில் தங்கியிருப்பது குறையும்.
- சிக்கலான பணிகளை பயனுறுதிமிக்க முறையில் நிறைவேற்ற முடியும்.

பிள்ளைகள், பெற்றோரிடமிருந்து/பெற்றோர்களிடமிருந்து பிரிந்திருத்தல், அல்லது அவர்களை இழந்துவிடல், வீடுகளில் வன்செயல்கள், சிறுவர் துஷ்பிரயோகம், யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் உள்ளிட்ட பல இக்கட்டான சூழ்நிலைகளை அவர்களது குடும்பங்களில், பாடசாலைகளில் மற்றும் சமூகத்தில் எதிர்நோக்குகின்றனர்.

பிள்ளைகள் எதிர்நோக்கும் இக்கட்டான சூழ்நிலைகள், அவர்களது சாதாரண, ஆரோக்கியமான வளர்ச்சியில் தாக்கத்தை உண்டுபண்ண முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளுக்கு ஆதரவு வழங்குவதில் ஆசிரியரின் பங்கு



பிள்ளைகளுக்கும் கட்டிளமைப் பருவத்தினருக்கும் ஆதரவை வழங்குவதற்கான மிகச் சிறந்த வழிகள், உண்மையில் பயனுறுதிமிக்க கற்பித்தலும் மற்றும் கற்கும் நுட்பங்களை கட்டியெழுப்பும் வழிகளுமாகும். எனவே முடிவில் நீங்கள் ஆசிரியரென்ற முறையில் பல வழிகளிலும் மிகச்சிறந்த நிலையில் இருக்கின்றீர்கள்:-

- பயனுறுதிமிக்க கற்பித்தலிலும் மற்றும் கற்கும் நுட்பங்களைப் பயன்படுத்துவதிலும் பயிற்சியையும் அனுபவத்தையும் கொண்டிருக்கிறீர்கள்.
- பெரும்பான்மையான வயதுவந்தவர்களிலும் பார்க்க இப்பிள்ளைகளுடனும் கட்டிளமைப் பருவத்தினருடனும் நாள் முழுவதும் தொடர்பு கொண்டுள்ளீர்கள்.
- பிள்ளைகள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினரின் தேவைகளில் பயிற்சியையும் அவற்றிற்கான உணர்திறனையும் கொண்டுள்ளீர்கள்.
- உங்களுடைய வகுப்பறைப் பாடங்கள், மற்றும் இணைந்த பாடவிதானச் செயற்பாடுகள் என்பவற்றின் தொடர்ச்சியாக குணப்படுத்தும் செயற்பாடுகளை வழங்குவதற்கு உங்களுக்கு வாய்ப்புண்டு. இந்த வகையான தொடர்ச்சிகள் மாணவர்களுடனான உணர்வுத் தொடர்புக்கு இட்டுச் செல்லுவதால் இனங்காணப்பட்ட மாணவர்கள் சகமாணவர்களால் இகழ்ச்சிக்குள்ளாக்கப்படும் சாத்தியம் குறைக்கப்படுகிறது.

### நீங்கள் செய்யக் கூடியவை:

1. உங்களுடைய மாணவர்களை கற்றலுக்கு ஊக்கப்படுத்தவும்.
2. விளையாட்டுக்கு வாய்ப்புகளை ஒதுக்குக.
3. ஆக்கச் செயற்பாடுகளைப் பயன்படுத்துக.
4. உங்களுடைய மாணவர்களுடன் பேசவும்; அவர்கள் கூறுவதைச் செவிமடுக்கவும்.
5. உங்களுடைய மாணவர்களின் குடும்பங்களுடனும் மற்றும் சமூகத்துடனும் தொடர்பைக் கொண்டிருக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் உந்துசக்திப் பயிற்சிகளை பயன்படுத்துவதன் மூலம் உங்களுடைய மாணவர்களுக்கு நீங்கள் ஆதரவை வழங்கமுடியும்.

எனது மாணவர்களுக்கு எவ்வாறு நான் ஊக்கமளிப்பேன்?

- உங்களுடைய மாணவர்களின் ஆற்றல்களை இனங்காணுங்கள்.
- அந்த ஆற்றல்களை வெளிப்படையாகப் பாராட்டுங்கள்.
- ஆற்றல்களைக் கட்டியெழுப்ப உதவுங்கள்.

எனது மாணவர்களின் ஆற்றல்களை நான் எவ்வாறு இணங் காண்பேன்?

- அவன்/அவள் செய்வதற்கு முன்வரும் விடயங்களை அவதானிக்க.
- அவன்/அவள் எவற்றை திறம்படச் செய்கின்றனர்.
- அவன்/அவள் யாருடன் தொடர்பு கொள்ளுகின்றனர்.
- அவன்/அவள் எவ்வளவு நேரத்திற்கு ஒரு பணிக்கு தன்னை பிரயோகிக்கக் கூடியதாயிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையானது, குற்றேவல்களைச் செய்தல், கணிதம் அல்லது மொழியில் மிகத்திறமையாகச் செய்தல், பிறரை தனது சிநேகிதர் குழுவுடன் சேர்த்துக் கொள்ள முயற்சித்தல் அல்லது பெருமளவு பொறுமை அல்லது ஆர்வத்தைக் காட்டுவதன் மூலம் மற்றவர்களை திருப்திப்படுத்த விரும்புகிறது. பிள்ளையொன்று பல ஆற்றல்களைக் கொண்டிருக்கமுடியும். ஒருமுறை இவை இனங்காணப்பட்டு, பிள்ளையினது அல்லது கட்டிளமைப் பருவத்தினரது ஆற்றல்கள் வெளிப்படையாகப் பாராட்டப்படின், இது அவர்களுக்கு ஒரு தனித்துவ உணர்வையும் அவனது/அவளது ஆற்றல்களை வெளிப்படையாகக் காட்டுவதற்கு உதவும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான துணிவையும் கொடுக்கும். பிள்ளையானது செயற்பாடொன்றை எவ்வளவு சிறப்பாகச் செய்கின்றதென்பது மாத்திரமன்றி, கடைப்பிடிக்கப்படும் செயன்முறையும் முக்கியமாகும். செயற்பாடொன்றின் போது பிள்ளை சிறப்பாகச் செய்யும் எதனையும் பாராட்டுதல் வேண்டும். உதாரணமாக

அவனது பணி நேர்த்தியாக இருப்பின் அல்லது ஏனையவர்களுக்கு அவன் உதவியாக இருப்பின் அல்லது தனது பணியில் முழுக்கவனத்தையும் செலுத்துமிடத்து பாராட்ட வேண்டும்.

பிள்ளையொன்று எவ்வளவுக்கு வெற்றி வாய்ப்புகளை உணர்கிறதோ, அந்த அளவுக்கு நம்பிக்கையையும், தனது வாழ்க்கையில் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கும். இக்கட்டான சூழ்நிலைகளில் வாழும் பிள்ளைகளிலும் கட்டிளமைப் பருவத்தினரிலும் பொதுவாகக் காணப்படும் நம்பிக்கையீனம் மற்றும் உதவியற்ற உணர்வு என்பவற்றை இதனால் தோற்கடிக்க முடியும்.

## இந்த ஆற்றல்களை எவ்வாறு நான் வெளிப்படையாகப் பாராட்ட முடியும்?

- ஒருவருடன் ஒருவர் உரையாடும் போது நேரடியாக மாணவனுக்கு/மாணவிக்கு, அவனது/அவளது சிறந்த அம்சங்களை அங்கீகரிப்பதுடன் அவற்றை மெச்சுவதாக கூறுதல் மூலம் நீங்கள் காட்டமுடியும்.
- அவன்/அவள் பணியொன்றில் ஈடுபட்டிருக்கும் போது அவனது/அவளது திறன்கள் பற்றிய கருத்துக் குறிப்புகளைக் கூறுதல்.

## ஆற்றல்களைக் கட்டியெழுப்ப நான் எவ்வாறு உதவ முடியும்?

- ஆற்றல்களைப் பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகளை அல்லது பணிகளை சிபாரிசு செய்க.
- பிள்ளையினது சுயாதீனத்தையும், இக்கட்டுகளுக்கு முகங்கொடுப்பதற்கு வேண்டிய உள்ளார்ந்த சக்தியையும் குறுகிய காலத்தில் மீளக் கண்டுபிடிக்க உதவக் கூடியவாறு, அவனது/அவளது ஆற்றல்களைப் பயன்படுத்தும் சொந்த வழிகளைக் கண்டுபிடிக்குமாறு மாணவனை உற்சாகப்படுத்தவும்.
- செயற்பாடுகளுக்கு அனுசரணை வழங்குமாறு மாணவர்களை உற்சாகப்படுத்தவும்.

பிள்ளைகளும் கட்டிளமைப் பருவத்தினரும் தமது அனுபவங்கள் மற்றும் உணர்வுகள் பற்றி பிறருடன் உரையாடுவதற்கு உதவுதலே ஆக்கச் செயற்பாடுகளைப் பயன்படுத்துவதன் முக்கிய குறிக்கோளாக இருப்பினும், அவர்களின் அனுபவங்களையும் உணர்ச்சிகளையும் பகிர்ந்துகொள்வதில் அவர்கள் காட்டும் ஆர்வமே இச்செயற்பாடுகளின் வெற்றிக்கு மிக முக்கியமாகும். பிள்ளையானது பங்குபற்ற விரும்பாவிடின், பங்குபற்றாதிருப்பதற்கு அதற்கு உரிமையுண்டு. மாணவன் ஒருவன், தான் எதிர்நோக்கும் இக்கட்டுகளை பற்றி பேசுவதற்கு விரும்பாதவிடத்து, அவை பற்றிப் பேசுமாறு வலியுறுத்தல் அப்பிள்ளையை இக்கட்டுக்குள்ளாக்கும். மனவலிமை பெற்றுக் கொண்டதான உணர்வின் பெரும் பகுதியானது, தேர்வுகளையும் மற்றும் தீர்மானங்களையும் செய்வதற்குரிய தன்மையாகும்.

- உங்களுடைய மாணவர்கள், தங்களைத் தாங்களே வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குக. அவர்கள் என்ன கூறவேண்டுமென்பதையும்,
- மற்றும் எப்பொழுது, எவ்வாறு தங்களை வெளிப்படுத்தவேண்டு மென்பதையும் அவர்களே தீர்மானிக்க அனுமதிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கலந்துரையாடல்..

- மாணவனை மையமாகக் கொண்ட கலந்துரையாடலாக இருத்தல் வேண்டும். சகல விடைகளும் வினாக்களும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அங்கு விடைகள் சரியானவை அல்லது பிழையானவை எனக் கூறுவதிற்கில்லை.

- உங்களுடைய மாணவர்களை அவதானமாக வழிநடத்தவும்.

அதிகளவு முதிர்ச்சியான நியாயம் காணும் திறன்களையும் அதிகளவு வாழ்க்கை அனுபவத்தையும் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் குறிப்பிட்ட குறிக்கோள்களையும் கொண்டிருக்கும் ஆசிரியர் என்ற முறையில் உங்களுடைய மாணவர்களை சில குறிப்பிட்ட திசைகளில் வழிநடத்த நீங்கள் விரும்பலாம்.

ஒரு பிள்ளை, படங்களைக் கொண்ட செயற்பாடொன்றை பாவித்து, அப்படத்தில் காட்டப்பட்ட பிள்ளை சார்பில் ஓர் முடிவெடுக்கும் போதும், அம்முடிவின் விளைவால் ஏற்படும் பெறுபேறுகளை ஆராயும்போதும், நீங்கள் கவனமாக இராதவிடத்து, இந்நிகழ்வு ஒரு விரிவுரையாக மாறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். இப்படியான ஓர் செயற்பாட்டில், மாணவர்கள் அல்லது சம்பந்தப்பட்ட மாணவன் "சரியான" முடிவை எடுக்கின்றானா என்பதல்ல, பதிலாக அவர்கள் தமது முடிவுகளின் விளைவுகளை புரிந்துகொள்ளுகின்றார்களா என்பதே முக்கியமானதாகும். இம்மாதிரியான மறைமுகமான வழிகாட்டல், ஆசிரியரை - மையமாகக்கொண்ட அணுகுமுறைகளிலும் பார்க்க அதிகளவு வெற்றிக்கு இட்டுச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளுக்கு விளையாட்டும் ஆக்கச் செயற்பாடுகளும் ஏன் முக்கியமானவை?

- அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு வேண்டிய வாய்ப்புகளை வழங்குவதற்கு
- சகஜ நிலைமையை உணர்தலை தோற்றுவிப்பதற்கு
- நம்பிக்கையான உறவுகள் , உரித்துடைமையுணர்வு, சமூக ஒன்றிணைவு என்பவற்றை விருத்தி செய்வதற்கு
- அமைப்பு, விளைவை முன்னரே கூறக்கூடிய தன்மை மற்றும் பாதுகாப்புணர்வு என்பவற்றை வழங்குவதற்கு
- நம்பிக்கை, ஆற்றல் (யாதேனுமொன்றை திறம்படச் செய்தல்) என்பவற்றை விருத்தி செய்வதற்கு
- பிள்ளைகள் பாதுகாப்பு உணர்வை பெறுவதற்கும் இதன் விளைவாக தங்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கும் ஆதரவைப் பெறுவதற்கும்
- சுயவெளிப்பாட்டுக்கும் ஆக்கத்துக்கும் வேண்டிய வாய்ப்பொன்றை உருவாக்குவதற்கு
- சமாளிக்கும் உத்திகளையும் சரியான பெறுபேறுகளையும் கண்டறிவதற்கு
- எதிர்காலத்தில் மீண்டும் நம்பிக்கையை உருவாக்குவதற்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உங்கள் மாணவர்கள் தமது செயல்கள், தமது வாழ்வில் சரியான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதை அறியுமிடத்து மனத்திடனுடையவர்களாவார்கள்.
- பிள்ளைகளும் கட்டிளமைப்பருவத்தினரும் பொறுமையையும், தலைமைத்துவத்தையும், ஒழுங்குமுறையையும் பின்பற்றவும், பகிர்ந்துகொள்ளவும், ஒருவருக்கொருவர் உதவி செய்யவும் கற்றுக்கொள்ளுகின்றனர்.
- விளையாட்டின் போது ஏற்படும் உடல்ரீதியான களைப்பும், மகிழ்ச்சியான உணர்வும் சேர்வதன் விளைவாக பிள்ளைகள் அமைதியையும் சமாதானத்தையும் அகத்தே உணர்ந்துகொள்ளுவர்.
- எனவே, அவர்கள் வெளியே செல்லவும், ஓடித்திரியவும் ஒருவருடன் ஒருவர் தொடர்பு வைக்கவும் கவலையற்றிருப் பதற்கும் போதிய நேரம் ஒதுக்கப்படுவதை நிச்சயப்படுத்தவும்.

### பாடுதலும் நடனம் ஆடுதலும்

- பிள்ளைகளும் கட்டிளமைப் பருவத்தினரும் தங்களைச் சூழ்ந்துள்ள இக்கட்டுகளை தற்காலிகமாக மறப்பதற்கும், சிறந்த உடனலத்துக்கு அத்தியாவசிய மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றன.

### எழுத்து, வரைதல் கைவேலை, விளையாட்டுக்கள், நாடகம் என்பன

- பிள்ளைகளும் கட்டிளமைப் பருவத்தினரும் தங்களுடைய உணர்வுகளை மெதுவாக வெளிப்படுத்துவதற்கு நுணுக்கமான பாதுகாப்பான ஊடகங்களை இவை வழங்குகின்றன. பிள்ளைகள், தங்களுடைய பங்களிப்புகளுக்கும் கருத்துக்களுக்கும் விளக்கமளிக்க அனுமதியுங்கள். தீர்ப்புக் கூறாதபடி, சகல விளக்கங்களையும் ஏற்றுக்கொள்ளுவ தென்பது, பிள்ளைகள் தாங்கள் உண்மையில் சிந்திப்பவற்றையும் உணருபவற்றையும் வெளிக்காட்டுவதற்கு உதவுகின்றன.

### கற்றலின் சகல அம்சங்களையும் ஆக்கச் செயற்பாடுகள் மேம்பாடடையச் செய்கின்றன.

ஆக்கச்செயற்பாடுகள் ஆசிரியராகிய உங்களைப் பொறுத்தவரை வகுப்பறைப் பாடங்களை மீளவலியுறுத்துவதற்கும், சகல பாடங்களும் உங்களுடைய மாணவர்கள் உயர்மட்ட, திறனாய்வு ரீதியான சிந்தித்தல் திறன்களை பயன்படுத்துவதற்கும் உற்சாகமளிக்கின்றன. கரும்பலகை மூலம் இலக்கணப் பாடமொன்றைக் கற்பித்தல், அறிவுக்குரிய அடிப்படையை வழங்குகின்றது. ஆயினும் கவிதையொன்றை எழுதி, அதனை மற்றவர்களுக்குப் பாடிக்காட்டுவதற்கான பாடலாக மாற்றிக்கொள்ளுதல், ஆக்கபூர்வமான கற்றலுக்கு மிகவும் பயனுறுதிமிக்க வழியாகக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கச் செயற்பாடுகள் உங்களுடைய மாணவர்கள், தங்களுடைய மூளையின் இருபக்கங்களையும் பயன்படுத்த உதவுகின்றன. ஞாபகத்தில் வைத்திருப்பதை அடிப்படையாக கொண்ட பெருமளவு வகுப்பறைக் கற்றலில் பிள்ளைகள், கட்டிளமைப் பருவத்தினர் தமது மூளையின் இடப்பக்கத்தையே பெரிதும் பயன்படுத்துகின்றனர். இதனால் அவர்களது மூளையின் அரைவாசிப் பகுதி பயன்படுத்தப்படுவதில்லை. ஆக்கச் செயற்பாடுகள் கூடுதலாக மூளையின் வலது பக்கத்தையும் மரபுவழி கற்றல் மூளையின் இடப்பக்கத்தையும் ஈடுபடுத்தும். சகல மாணவர்களுக்கும் முழு மூளையையும் பயன்படுத்தும் கற்றல் அத்தியாவசியமாக அமைகிறது.

எந்தவகை ஆக்கச் செயற்பாட்டைப் பயன்படுத்தும் போதும் மரபுவழியான கலாசார முறையைக் கவனத்திற் கொள்ளவேண்டும். பேச்சுமூலம் விளங்கவைப்பதைவிட கருத்துக்களை சின்னங்களாக விளங்க வைக்கும் கலையை, மரபுவழிக் கலாசார முறைகள் கொண்டிருப்பதால், இவ்வழி மக்களுக்கு கூடிய பயனுள்ளதாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய குழுக்களில் இச்செயற்பாடுகளை நான் எவ்வாறு செய்வேன்?

### சில ஆலோசனைகள்

- இச் செயற்பாடுகளுள் பெரும்பாலானவை 20 - 30 மாணவர்களுக்கு மேற்படாத குழுக்களுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- இம்மாதிரியான குழுவொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் "ஒருங்கிணைப்பு" எனப்படும் செயன்முறையைப் பயன்படுத்தவேண்டும்.
- ஒருங்கிணைப்பு என்னும் முறையில் பெரிய குழுவொன்று ஒவ்வொன்றும் ஒரு தலைவரைக் கொண்ட சிறிய குழுக்களாகப் பிரிக்கப்படுகிறது.
- ஆசிரியர், குழுவொன்றுடன் 15 - 30 நிமிடங்களுக்கு ஆக்கச் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் வேளையில், ஏனைய குழுக்கள் ஒப்படைக்கப்பட்ட வகுப்பு வேலையில் அல்லது ஏனைய செயற்பாடுகளில் ஈடுபடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு குழுவுடன் உங்களது இடைத்தாக்கத்தை முடித்துக் கொண்டதும் இன்னொரு குழுவுக்கு மாறுவீர்கள்.
- எல்லாக் குழுக்களையும் சந்திப்பதற்காக நீங்கள் இரு நாட்களுக்கும் மேலாக செலவு செய்யவேண்டியிருக்கும்.
- குழுக்களுக்கு வேண்டிய தலைவர்களை கவனமாகத் தெரிவு செய்யவேண்டும்.
- வழிநடத்துனர்களை தெரிவு செய்யும் போது, பெண் பிள்ளைகள் உள்ள குழுவுக்கு ஒரு பெண் பிள்ளையையும் ஆண் பிள்ளைகள் உள்ள குழுவுக்கு ஒரு ஆண் பிள்ளையையும் தெரிவு செய்வதால் வழிநடத்துனரும் குழுவினரும் ஒரே பாலாராய் இருப்பர். இதனால் இவர்களுக்கிடையே உள்ள பிணைப்பு கூடுதலாக காணப்படும்.

- நீர் தெரிவுசெய்யும் வழிநடத்துனர் கூடுதலான முதிர்ச்சியும் இலகுவில் சரளமாக பழகும் இயல்பு குறைந்தவராகவும், குறிப்பிட்ட சில நாட்களில் கூடுதலாக சேர்ந்து பழகக்கூடியவர்களாகவும், சில தடவைகளில் தலைமைத்துவம் வகிப்பதற்கு பின்னடைபவராகவும் இருக்கக்கூடும்.

முதிர்ச்சி கூடிய மாணவர்கள் தம் குழுவிலுள்ள ஏனைய மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், மொழி அல்ல நீர் குறிப்பிட்ட வேறு பாடத்திட்டங்களை சார்ந்த வேலைகளில் உதவலாம். இது அவர்களை மனத்திடனுள்ளவர்களாக உணரச்செய்வது மட்டுமன்றி, தம் குழுவில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான தீர்மானங்களை எடுப்பதற்கும் உதவுகின்றது.

- தம் குழுவிலுள்ள ஏனைய மாணவர்களுடன் வேலை செய்ய தொடங்குமுன், சகல வழிநடத்துனர்களுக்கும் பயிற்சி அளிக்கத்தவறக்கூடாது. இப்படி செய்வதன் மூலம் ஏனைய மாணவர்களை நல்ல அனுகூலமான விளைவுகளை பெற்றுக் கொள்ள வழிநடத்தமுடியும்.
- காலம், நேரம் என்பவற்றை பொறுத்தமட்டில் ஆக்க வேலைகளை வகுப்பு நேரத்திலோ அல்லது மாணவர்கள் வீடு செல்ல முன்னர் கிடைக்கும் இடைநேரத்திலோ வைத்துக் கொள்ளலாம்.
- உங்களுடைய வகுப்பறைகள் மிகச்சிறியனவாக இருப்பதால் ஆக்கச்செயற்பாடுகளை திறம்பட செய்ய முடியாது இருக்கும். இதை மேற்கொள்வதற்கு ஆக்கச்செயற்பாட்டில் ஈடுபடும் குழுவை ஏனைய மாணவர்களிடமிருந்து பிரித்தெடுப்பது நல்லது.
- நல்ல காலநிலை இருக்குமானால் வெளியே ஒரு மரத்தின கீழ் கொண்டு செல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது மாணவர்களின் பிரச்சினைகள் பற்றி அவர்களுடன் நான் எவ்வாறு உரையாடலாம்?

மூலவளப் புத்தகம்

உங்களுடைய மாணவர்களுடன் சிறந்த தொடர்பாடலைப் பேணுவதற்கான உண்மையான திறவுகோல் அவர்களை நன்கு செவிமடுப்பதாகும்.

- நீங்கள் பிள்ளையொன்றுடன் (18 வயதுக்குட்பட்ட) தொடர்பாடலை மேற்கொள்ளுகிறீர்கள் என்பதையும் அப்பிள்ளையின் உரிமையின் அடிப்படையில் அது பெறுமதி வாய்ந்த நபர் என்பதையும் நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
- பிள்ளையின் வயதையும் விருத்தி நிலையையும் கருத்திற் கொள்க. வயதில் குறைவான பிள்ளைகள், தங்களைச் சூழவுள்ள உலகத்தைப் பற்றிய மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களையும் அனுபவத்தையும் கொண்டிருப்பதால் அவர்கள் அனுபவித்தவற்றை அல்லது பார்த்தவற்றை பூரணமாகப் புரிந்து கொள்ளமாட்டார்கள். இது அவர்கள் அனுபவித்தவற்றை அல்லது பார்த்தவற்றை எடுத்துக் கூறுவதையும் சிரமமாக்கும்.
- பிள்ளையுடன் உரையாடுவதற்கு தனிப்பட்ட இடமொன்றைத் தேடிக்கொள்க.
- பிள்ளையின் உணர்வு நிலை பிள்ளையானது அநேகமாக இக்கட்டான சூழ்நிலைகளை அனுபவித்திருப்பதையும் மற்றும் அதற்கு ஆதரவு/பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவைப்படலாமென்பதையும் ஞாபகத்தில் இருத்திக்கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிள்ளை நிம்மதியாக இருக்கவும், சுமுகமான உறவை ஏற்படுத்தவும் போதியளவு நேரம் கொடுக்கவும்.
- பார்வைத் தொடர்பு: ஓர் பிள்ளை உம்மிடம் பேசும்போது அப்பிள்ளையை நேருக்கு நேர் பார்த்தல், பிள்ளை தான் சொல்வதை நீங்கள் செவிமடுப்பதில் ஆர்வம் கொண்டுள்ளீர்கள் என்பதை விளங்கவைக்கும்.
- தடங்கல்கள் எதுவுமின்றி பிள்ளையை பேசுவதற்கு அனுமதிக்கவும். சிறந்த தொடர்பாடலுக்கான திறவுகோல் நன்கு செவிமடுத்தலாகும். உங்களுடைய மாணவன் அல்லது மாணவி பேசும் போது உங்களுடைய தலையை அசைப்பதன் மூலமும் சிறு சொற்களாகிய "ஆ", அப்படியா? போன்றவற்றை கூறுவதன் மூலமும் உங்களுடைய கருத்துக் குறிப்புகளை அதிகுறைவாக வைத்திருக்க முடியும். இது பிள்ளை கூறுபவற்றில் நீங்கள் நாட்டம் கொண்டுள்ளீர்கள் என்பதையும் அதனைப் பொறுமையுடன் கேட்கின்றீர்களென்பதையும் காட்டுகிறது..
- அவசியமாயின் தனக்கு தேவையானவற்றைக் கூறிமுடித்ததும் வினாக்களைக் கேட்கவும். பிள்ளையானது தான் விரும்புகின்றவற்றை கூறுவதற்கு உதவும் பொருட்டு திறந்த வினாக்களைக் கேட்கவும். ஒரே வினாவை பல தடவைகள் கேட்பதைத் தவிர்த்துக் கொள்க.

**ஒத்த உணர்வு நிலை:**

ஒத்த உணர்வு நிலை, அனுதாப நிலையை விட வித்தியாசமானது. ஒத்த உணர்வு நிலையானது, ஒருவர் தாம் கொண்டுள்ள தனிப்பட்ட, தனித்துவமான அபிப்பிரயாயமாகும். அத்தோடு, இன்னொருவர், அவருள்ள சூழ்நிலையில், அவர் கொண்ட கருத்தை அறிந்துகொள்ள தன்னை அவர் நிலையில் வைத்துப் பார்த்தலாகும். உதாரணமாக "உமது நிலை எனக்கு புரிகிறது" போன்ற சிறிய சொற்றொடர், ஒத்த உணர்வு நிலைக்குரிய மாறுத்தரமாகும். உங்களுடைய மாணவரின் உணர்வோடு ஒத்த உணர்வை நீங்கள் காட்டவேண்டுமெனில், "அது மிகவும் பயங்கரமாக இருந்திருக்குமே" என்பது போன்ற சொற்றொடரையும் உபயோகிக்கலாம்.

நீங்கள் பிள்ளைகளுடன் உரையாடவும் அவர்களின் கருத்துக்களுக்கு செவிமடுக்கவும் காத்திருப்பதற்கு பொறுமை உடையவர்களென ஒரு தடவை அவர்களுக்கு தெரிய வந்ததும் அவர்கள் இலகுவில் மனம் விட்டு பேச விளைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பது அல்லது அதற்கும் கூடிய பிள்ளைகளைக் கொண்ட வகுப்பொன்றைக் கற்பிக்கும் போது, சிரமமான நடத்தையை வெளிக்காட்டும் மாணவர்களை சமாளிப்பது பெரும்பாலும் ஒரு சவாலாகவே இருக்கிறது. உடல்ரீதியான தண்டனையளித்தல், பிள்ளைகள் சிரமங்களை சமாளிக்க உதவமாட்டாதென்பதால் அது ஒரு பயனுறுதிமிக்க முறையாக அமையமாட்டாது. பிள்ளைகள் சிரமமான நடத்தையைக் காட்டுவதற்கு எப்பொழுதும் ஒரு காரணமிருப்பதால் அவர்களுக்கு, வகுப்பிலும் அதற்கு வெளியிலும் உங்களுடைய ஆதரவு தேவைப்படும்.

- பிள்ளை பாடசாலையிலிருக்கும்போது அதனை அவதானியுங்கள். அவனது/அவளது விருத்தி நிலையோடு அப்பிள்ளையின் நடத்தை தொடர்புடையதா அல்லது கூடுதலாக உள்ளதா?
- பிள்ளையை செவிமடுக்கவும். (பிள்ளையானது எதிர்நோக்கும் சிரமங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.)
- திட்டமொன்றை வகுக்க உங்களுடைய வகுப்பறையில் இப்பிள்ளை ............ செய்யும் போது நான் எவ்வாறு பிரதிவிளைவைக் காட்டுவேன்? பிள்ளையை நான் எவ்வாறு உற்சாகப்படுத்துவேன்?
- பிள்ளையை உற்சாகப்படுத்துவதற்கும் மற்றும் சுயமதிப்பினை கட்டியெழுப்புவதற்கும் எச்செயற்பாடுகள் உபயோகமாயிருக்கும்?
- நீர் திட்டமிட்ட முறைகளை அப்பிள்ளைக்கு பிரயோகிக்கும் போது ஏற்படும் மாற்றங்களை அவதானிக்கவும். முன்னேற்றம் காணப்படாத விடத்து வேறோர் நடைமுறையை பிரயோகித்தல்.
- சில பிள்ளைகளுக்கு தொடர்ச்சியாக காலாகாலத்துக்கு ஆதரவு வழங்க வேண்டிய தேவை உண்டு. (குடும்பம் மற்றும் சமூகம் என்பவற்றுடனான இடைத்தாக்கங்கள் என்னும் பகுதியை பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பம் மற்றும் சமூகம் என்பவற்றுடனான இடைத்தாக்கங்கள்


மூலவளப் புத்தகம்

உங்களுடைய மாணவர்களின் குடும்பங்களுடனும் மற்றும் பரந்த அளவில் சமூகத்துடனும் இடைத்தாக்கத்திற்கான மேலதிக நேரம் கிடைப்பது சிரமமாயினும் உங்களுடைய வகுப்பறையில் மாணவர்கள் ஒவ்வொருவருடனும் நீங்கள் எடுக்கும் முயற்சியானது பலனளிக்கக்கூடியதாயிருக்கும்.

உங்களுடைய மாணவனையும் அவனது/அவளது முன்னேற்றத்தையும் பற்றி அக்கறை கொண்டுள்ள பெற்றோர்களுடன்/பராமரிப்பாளருடன் உரையாடலை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளவும். குடும்பங்கள், தமது பிள்ளைகள் பற்றிய உடன்பாடான பின்னூட்டல்களைக் கேட்க விரும்புவார்கள். குடும்பங்கள் தமது வீட்டு நிலைமைகள் பற்றி உங்களுடன் கலந்துரையாடுமளவுக்கு அவர்களின் நம்பிக்கையையும் நீங்கள் ஈட்டிக் கொள்ளமுடியும். எல்லாவற்றுக்கும் மேலாக, நீங்கள் ஒரு ஆசிரியர் என்பதுடன் சமூகத்திலும் மதிக்கப்படும் ஒருவராகும்.

### பராமரிப்பாளர்களுடன் உரையாடும் போது

- பிள்ளையைப் பற்றிய உடன்பாடான பின்னூட்டலை நீங்கள் கொடுப்பதை நிச்சயப்படுத்தல் வேண்டும். பாடசாலையில் பிள்ளையின் முன்னேற்றம் அல்லது நடத்தை என்பன பற்றிய சிரமங்களை நீங்கள் கலந்துரையாடும் போது, பெற்றோர் அப்பிள்ளைக்கு உதவுவதற்கு எவற்றைச் செய்யமுடியுமென்பது பற்றிய ஆலோசனைகளை அவர்களுக்கு கூறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வீட்டில் பிள்ளைக்கு எவ்வாறு ஆதரவை வழங்க வேண்டுமென்பது பற்றிய தகவல்களையும் மற்றும் வழிகாட்டலையும் பெற்றோருக்கு கொடுக்கவும்.
- சமூகத்தில், பிள்ளைகளுக்கும் குடும்பங்களுக்கும் வழங்கப்படக்கூடிய சேவைகள் பற்றி நீங்கள் தெரிந்திருக்க வேண்டுமென்பதுடன், பராமரிப்பாளருக்கு சரியான தகவல் களை வழங்குதல் வேண்டும். இவை இளைஞர் சங்கங்கள், விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்குரிய சேவைகள், மருத்துவச் சேவைகள் குடும்பங்களுக்கு சமூக ஆதரவை வழங்கும் நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

பிள்ளை இரகசியமான முறையில் உங்களுக்கு எதனையும் கூறினால் முதலில் அப்பிள்ளையுடன் கலந்துரையாடாமல் அது பற்றி பெற்றோருக்கு ஒன்றும் கூறவேண்டாம். பிள்ளை உங்களுக்கு இரகசியமாகக் கூறுபவற்றை பெற்றோருக்குத் தெரிவிப்பது உங்கள் மீது பிள்ளை வைத்திருக்கும் நம்பிக்கையைத் தகர்த்துவிடும். அத்துடன் "குடும்ப விடயங்களை" ஆசிரியருடன் கலந்துரையாடியமைக்காக பிள்ளையையும் பிரச்சினையில் மாட்டிவிடலாம். பிள்ளையின் பாதுகாப்புக்காக அல்லது அதன் சேமநலனுக்காக பெற்றோருக்கு அறிவிப்பது முக்கியமாயின், பெற்றோருக்குக் கூறுவதற்கு முன்பதாக இதுபற்றி பிள்ளையுடன் கலந்துரையாடுக.

பாடசாலை அபிவிருத்தி சபையின் (பா அ ச) கூட்டங்களை மேம்படுத்துதல், அவற்றுக்கு சமூகமளித்தல் என்பனவும், சாதாரண குடும்ப மற்றும் சமூக வாழ்க்கைக்கு மீளுதலை ஊக்குவிப்பதற்கும் அவ்வாறு செய்வதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்கும் உங்களுக்கு ஒரு மன்றமாக அமைகின்றது. மேலும் பிள்ளைகளுக்கு எவ்வாறு ஆதரவளித்தல், மற்றும் பிள்ளைகளும் கட்டிளமைப் பருவத்தினரும் உணரும் உளவியல் ரீதியான அல்லது ஆன்மீக ரீதியான பாதுகாப்பின்மை மோசமடைவதைத் தடுத்தல் என்பன போன்ற விடயங்கள் பற்றி ஆராய்வதற்கும் இம்மன்றத்தை நீங்கள் பயன்படுத்தமுடியும்.

மரபுவழியான கலாசார நடைமுறைகள், இரு விடயங்களினதும் ஒரு பகுதியாக அமைகின்றன. சில நடைமுறைகள் பிள்ளையினது பாதுகாப்பின்மையை மோசமடையச் செய்பவையாகவும் வேறு சில நடைமுறைகள் பயனளிப்பவைகளாகவும் அமையலாம். உங்களுடைய பாடசாலையில் பராமரிப்பாளருக்கான தகவல்களைக்கொண்ட அறிவித்தல் பலகையொன்றை வைக்கமுடியும்..
பாடசாலையின் பலதரப்பட்ட சமுகத்தவர்களை வரவழைப்பதன்முலம் நீஙகள் குடும்பங்களுடனான இடைத்தாக்கத்திற்கு சந்தர்ப்பங்களைப் பெறுவதுடன் முழுச்சமுகமும் ஒன்றுசேர்ந்து மீண்டும் உறுதி நிலையையும் ஒருமைப்பாட்டையும் உணர்ந்துகொள்ளக்கூடிய இடமொன்றையும் வழங்குகின்றீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாருடன் தொடர்பு கொள்வதும் எவ்வாறு இணைந்து கொள்வதும்.

ஒவ்வொரு பிள்ளையும் வித்தியாசமானது. பிள்ளையின் மனோபாவம், அது பெற்றுக் கொள்ளும் ஆதரவு, துன்பத்தை விளைவிக்கும் சம்பவத்தின் தன்மை மற்றும் அதன் தீவிரம் என்பவற்றைப் பொறுத்து பிள்ளைகள் தங்களுடைய வாழ்க்கையில் காட்டும் பிரதிவிளைவுகளும் வேறுபடுகின்றன.

பிள்ளைகள் உள்ளார்ந்த சக்தியை கொண்டவர்கள். மேலும் கால அவகாசமும், அவர்களைச் சூழவுள்ளவர்களிடமிருந்து ஆதரவும் கிடைக்கப்பெறின், அவர்களுள் பெரும்பாலானோர் சமாளித்துக் கொள்ளுவார்கள்.

## எனினும் விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகளும் இருப்பார்கள்.


- பிள்ளையொன்று தொடர்ச்சியாக உணர்ச்சி மற்றும் நடத்தைப் பிரச்சினைகளையும், குறிப்பிட்ட காலப்பகுதியில் பாடசாலைக் கல்வியில் சிரமங்களையும் எதிர்நோக்குவதை நீங்கள் அவதானித்தால்
- குறிப்பிட்ட காலப்பகுதியில் பிள்ளை தனது நாளாந்த செயற்பாடுகளிலும் காரியக்கிரமங்களிலும் இடைத்தாக்கங்களிலும் ஈடுபட முடியாதுவிடின்

இது மிகப் பொருத்தமான சேவைகளை பிள்ளைக்கு பெற்றுக்கொடுக்கும் முகமாக பாடசாலை மதியுரைஞருடன் அல்லது அதிபருடன் உங்களுடைய அக்கறைகளை கலந்துரையாடுவதற்கு வேண்டிய அறிகுறியாகும். உதவுனர்களை சிபாரிசு செய்யும் போதும் உங்களது பாடசாலை வழிகாட்டிகளையும் நிருவாக நடைமுறைகளையும் உள்ளடக்கும் விதமாக பணிசெய்யவும்.

- பொருத்தமான சேவைகளைப் பெறுவதற்காக அவர்களின் பிள்ளையை பிற உதவுனர்களிடம் வழி நடத்துவதற்கான காரணங்களையும் மற்றும் கிடைக்கக் கூடிய சேவைகளையும் பெற்றோருக்கு/ பராமரிப்பாளருக்கு விளக்குக.

- உங்களுடைய மாணவனின் அல்லது மாணவியின் சூழ்நிலையை அறிந்து கொள்வதன் மூலம் அவனுக்கு/அவளுக்கு நீங்களும் உதவமுடியும்.

- பாடசாலையில் பிள்ளைக்கு ஆதரவளிப்பதுடன் மற்றைய ஆசிரியர்களையும் அவ்வாறு செய்வதற்கு உற்சாகப்படுத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சேமநலன், உங்களுக்கும் உங்களிடமிருந்து ஆதரவைப் பெறும் பிள்ளைகளுக்கும் மிக அத்தியாவசியமாகும்.

- நீங்கள் செய்ய விரும்பும் விடயங்களைச் செய்வதற்கும், உங்களுடைய நண்பர்களுடனும் குடும்பத்துடனும் கூட இருப்பதற்கும் வேண்டிய கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்ளும் வழி-முறைகள் பற்றிச் சிந்திக்கவும்.
- சரியான கற்பித்தல் சாதனங்களையும் ஒழுங்கான பயிற்சிகளையும் கொடுப்பதன் மூலம் ஆசிரியர்களுக்கு ஆதரவு வழங்கமுடியும்.
- ஆசிரியர்கள் தமது சிரமங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு அதிபரின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்படும் ஒழுங்கான ஆசிரியர் கூட்டங்கள் சிறந்த மன்றமாக அமையலாம்.
- ஆசிரியர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவு வழங்கும் செயன்முறைக்கு ஆசிரியர் ஆதரவுக் குழுக்கள் அனுசரணை வழங்க முடியும்.
- ஆசிரியர்கள், பாடசாலை முடிவடைந்த பின் தங்களுடைய வகுப்பறைச் சூழ்நிலைகள் பற்றி முறைசாராத வகையில் கலந்துரையாடுவதற்கு சந்திப்பதற்கும் தமது கூட்டாளிகளுடனும் அவர்களின் குடும்பங்களுடனும் ஓய்வாக இருப்பதற்கும் மற்றும் புத்தங்கள், சஞ்சிகைகள், தேசிய, சர்வதேச செய்தித்தாள்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் உதவக்கூடிய ஆசிரியர் சங்கங்களை அமைக்கமுடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org